# திருமூலர் கூறும் அறக்கருத்துகள்

**முனைவர். கு.விஜி**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,**
**வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.**

22

**ஆய்வுச்சுருக்கம்**

திருமூலர் எழுதிய திருமந்திரமும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும் மக்களை நல்வழிப்படுத்துகின்ற அறக்கருத்துகளை ஒரே சிந்தனையில் எடுத்துரைக்கின்றன.

**திறவுச் சொற்கள் :**அறம், அறத்தின் மேன்மை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை.

**முன்னுரை**

மானுடப் பிறவியின் மகத்துவங்களைப் பாடிய மனிதர் திருமூலர் இவர் அருளாளராக, அடியாராக மட்டுமின்றி தவயோக சித்தராகவும், உடல்பினி அகற்றும் மருத்துவராகவும், ஞானயோகியாகவும் திகழ்ந்திருக்கிறார். அவரது மந்திரங்கள் அனைத்தும் மனத்துயர் போக்கும் மாமருந்துகள். திருமூலரின் திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுகிறது. திருமூலர் இறை சித்தாந்தம் மட்டும் கூறவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் அறக்கருத்துகளையும் கூறுகிறார். சித்தர்களுள் ஒருவராகப் போற்றப்படும் திருமூலரின் சிந்தனைகள், அக்காலச் சூழ்நிலையில் புரட்சி பூக்களாகவே மலர்ந்தன. அவரது பாடல்களில் காணப்படும் அறக்கருத்துகளை திருக்குறளுடன் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம்**

அறத்திணை என்பது ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்னும் எட்டுப் பொருள்களில் வழங்குவர்.

திருமந்திரம் - கொல்லமை, புலால் மறுத்தல், நல்குரவு, அறம் செய்யாமை, கல்லாமை கள்ளுண்ணாமை, திருக்கோயிலிழிவு, கூடா ஒழுக்கம், மோட்ச நிந்தை, பொய்கூறல், ஆவா ஆகியவற்றை அறத்திற்குப் புறம்பானவைகளாகக் குறிப்பிடுகின்றது.

**“அறனெறி யாவன தறிந்தேனும் நானுஞ்**
**சிவநெறி தேடித் திரிந்தஅந் நாளும்**
**உரநெறி யுள்ளக் கடல் கடந்தேனுந்**
**தரநெறி நின்ற தனிச்சுடர் தானே”**

அறம் என்பது ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும்

என்பதேயாகும். மனத்தூய்மை இல்லாதவை ஆரவாரத் தன்மை உடையது என திருக்குறள் கூறுகின்றது.

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆலக நீர பிற”**

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் அவற்றை ஒழித்தலே அறமாகும் என்பதை திருவள்ளுவர்

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்”**

இது போன்ற பல அறக்கருத்துகளும் அறம் சார்ந்து தோன்றிய பழக்க வழக்கங்களும் மக்களிடையே ஒழுக்கத்தை வலியுறுத்துவனவாக அமைகின்றன. ஒழுக்கத்தின் அடிப்படையில் நன்மை, தீமைகள் வரையறை செய்யப்படுகின்றன.

**அறத்தின் மேன்மை**

உலகில் உயர்ந்த இடத்தைப் பெறுவதற்கும் மக்களிடையே நல்மதிப்பினைப் பெறுவதற்கும் அறம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட அறச் செயல்களைச் செய்தவர்கள் பெற்ற பயனை திருவள்ளுவர் கீழ்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

**“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல”**

அறநெறியில் வாழ்வதால் வரும் பயனே இன்பம். மற்ற வழிகளில் வரும் பயன், இன்பம் இல்லாததும் புகழற்றதும் ஆகும்.

**“இருமலும் சோகையும் ஈனையும் வெப்பும்**
**தருமம் செய் யாதவர் தம்பாலது ஆகும்**
**உரும், இடி, நாகம், ஊரோணி கழலை**
**தருமம் செய்வார் பக்கல் தாழகி லாவே”**

அறம் செய்யாதவரை இருமலும், சோகையும் கோழையும் அறமும் தேடி வந்து அடையும், மின்னலும், இடியும், பாம்புக்கடியும், தொண்டை நோயும், வயிற்றுக்கட்டியும் அறம் செய்பவர் அருகில் வராது என்கிறார் திருமூலர்.

அறம் செய்தவர்கள் மட்டுமே மேன்மை அடைய முடியும் என்பதை இக்கருத்து தெளிவாக்குகின்றது.

**கொல்லமை**

வன்முறை தலைவிரித்தாடுகின்ற இன்றைய சூழலில் உயிர்க்கொலை பெருகி வருவது பரவலாகக் காணப்படுகின்றது. பிற உயிரைக் கொல்வதற்கு மனிதனுக்கு உரிமை இல்லை. அங்ஙனம் பிற உயிரைக் கொல்பவர் நரகத்தில் தள்ளப்படுவர் என்பதைத் திருமந்திரம்.

**“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக்காரர் வலிக்கயிற் நாற்கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே”**

என்று (கொல்லமை -2) குறிப்பிடுகின்றது. வள்ளுவர் பத்து குறட்பாக்களில் கொல்லாமையை எடுத்துரைக்கின்றார். அவருடைய பார்வையில் பிற உயிரைக் கொல்பவர் இழிந்தவராகக் கருதப்படுகின்றார். இதனை,

**“கொலைவினையர் ஆகியமாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவார் அகத்து”**

என்ற குறட்பா (கொல்லாமை-9) புலப்படுத்துகின்றது.

**புலால் மறுத்தல்**

ஆற இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் புலால் உண்ணுதல் அறத்திற்குப் புறம்பானதாகக் கருதப்பட்டது. அற இலக்கியச் சிந்தனை உருப்பெறுவதற்கு முன்பு புலால் உண்ணும் வழக்கம் தள்ளப்படவில்லை. தன் ஊனைப் பெருக்க பிற உயிரினைதின்பது மாபெரும் தவறாகக் கருதப்பட்ட அறக்காலத்தில் புலால் உண்பவர் இழிவாகக் கருதப்பட்டனர். இதனைத் திருமூலர்,

**“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே”**

என்று (புலால் மறுத்தல் - 1 – 1) குறிப்பிடுகிறார். எல்லோராலும் இழிவாகக் கருதக்கூடிய புலையராக புலால் உண்பவர் இருப்பர் என்பது திருமூலரின் கருத்து. புலால் உண்ணாமையை வலியுறுத்திய வள்ளுவர்.

**“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்”**

என்று (புலால் மறுத்தல் -10) எடுத்துரைக்கின்றார். புலால் உண்ணாதவனை உலக

உயிர்கள் அனைத்து கைகூப்பித் தொழுகின்ற நிலை உருவாகும் என்ற கருத்தினயொட்டி திருமந்திரக் கருத்தில் புலால் உண்பவர் இழிதக்க புலையனாக சித்தரிக்கப்படுகின்றான். புலால் உண்ணாமையை இரு நூல்களும் வலியுறுத்துகின்றன.

**பிறன்மனை நயவாமை**

தன் மனைவி தன் அகத்தே இருக்கும் மாற்றான் மனைவியைத் தேடிச் செல்வது இழிவான குணம். தன் மனைவியை மட்டுமே நேசித்தால் தீங்கு ஏதும் வாராது. இதனைத் திருமந்திரம், திருக்குறள் ஆகியவை வலியுறுத்திக் கூறுகின்றன.

**“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையானைக் காமுறுங் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழுத்துக் கிடருற்றவாறே”**

என்று வள்ளுவரும் கூறுகின்றார்.

“நலக்கு உரியார் யார்? எனின் நாமநீர் வைப்பின்
பிறற்கு உரியாள் தோள்தேயாதார்”

என்று திருமூலர் (பிறன்மனை நயவாமை – 1)

பிறன்மனையைத் தேடுவது அருகிலுள்ள நன்கு பழுத்த சுவை மிகுந்த பலாவை விடுத்து காட்டகத்தே சென்று ஈச்சம் பழத்தை நாடி அவதியுறுவது அறியாமை என்கிறார். திருமூல நாயனார். உலகிலுள்ள நலமனைத்தும் பெறுவதற்குரியவர் பிறர் மனைவியை நாடாதவர் என வள்ளுவர் பகர்கின்றார்.

**கள்ளுண்ணாமை :-**

நீதி நூல் காலத்தில் கள்ளுண்டு களித்த அறவே ஒதுக்கக்கூடிய செயலாகக் கருதப்பட்டது. சங்க காலத்தில் கள்ளுண்ணல் மிகப்பெரிய தவறாகக் கொள்ளப்படவில்லை. அறநூல்கள் கள்ளுண்ணலைக் கடிந்து ஒதுக்குகின்றன.

**“மயங்குந் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்**
**இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி**
**முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்**
**இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே”**

என்ற (கள்ளுண்ணாமை-7) திருமந்திரப் பாடல், கள் தரும் மயக்கமும் அதனால் பெறும் சிற்றின்பமும் அதில் மூழ்கியோர் பேரினபம் பெறாது போதும் நிலையையும் எடுத்துரைக்கின்றது.

ஒரு மனிதன் சான்றோரால் போற்றி உரைக்கப்படம் வகையில் வாழ்தல் வேண்டும் அங்ஙனம் போற்றப்பட வேண்டமென விரும்புவோரே கள்ளுண்பர் என்று

**"உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்**
**எண்ணப் பட வேண்டா தார்"**

திருக்குறள் (கள்ளுண்ணாமை -2) கூறுகின்றது.

**தொகுப்புரை :-**

திருமந்திர அறக்கருத்துகள் திருக்குறளிலும் உள்ளன. காலத்தால் பிந்திய நூலான திருமந்திரம் வள்ளுவரை ஏற்றுக்கொள்கின்றது. திருக்குறளில் அறக்கருத்துகள் பலவற்றையும் திருமந்திரம் ஏற்கின்றது.

அறக்கருத்துகளாக பிற உயிர்களை கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை அறன் வலியுறுத்தல் என்ற தலைப்புகளில் கூறி அறங்களால் உல மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும், அதனைப் பின்பற்றாதவர் படும் துன்பங்களையும் எடுத்துக்கூறியுள்ளதால் அறமாகிய நன்மையை மட்டும் மக்கள் போற்றுகின்ற பொழுது சமுதயாம் மிக விரைவாக நல்ல முன்னேற்றம் அடைந்து வளமாக இருக்கும் என்ற உயர்ந்த எண்ணத்தில் அறக்கருத்துக்களை எடுத்துரைத்துள்ளனர். சான்றோர்கள் சான்றோர் சொல்லைப் பொன்னாக போற்றி பின்பற்றினால் எல்லா வளமும் பெற்று வாழலாம்.

**துணைநூல்பட்டியல்**

1. திருமந்திரம் மூலமும் தெளிவுரையும் (உ.ஆ) அ.மாணிக்கம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.
2. ஒன்பதாம் திருமுறை, திருமந்திர ஆய்வு மாலை (ப.ஆ) (ப.ஆ) கோ.ப.நல்லசிவம், ஒன்பதாம் திருமுறை, திருமந்திர ஆய்வு மாநாடு – குமாரசாமித் திருமடம், வாரணாசி.